| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>அர்ச்சுணன் | அ.வ.எண்.120/2017 | 21.11.2022 |

குறுக்கு விசாரணை

இந்த வழக்கிற்கு விவரம் சொன்னது நான் தான். தேசிய நெடுஞ்சாலைக்கு அடுத்து கீழ்புறமாக நாகம்மாள் என்பவருக்கு இடம் இருப்பதாக சொல்வது நான் தான் என்றால் சரிதான். அதற்கு அடுத்து கீழ்புறமாக சந்து பாதை உள்ளது என்று சொல்வதும் நான் தான் என்றால் சரிதான். மேற்படி பாதை இருப்பதை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருச்சி – சென்னை நெடுஞ்சாலை கீழ்புறத்தில் பிரதிவாதிக்கு சொந்தமான கடை மற்றும் வீடு உள்ளது என்றாலும், அதேபோல் கந்தசாமிக்கு சொந்தமான வீடு மற்றும் கடை உள்ளது என்றாலும் சரிதான். கந்தசாமி வீட்டிற்கு கீழ்புறத்தில் எனக்கு சொந்தமான காலி மனை உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பிச்சை வீட்டிற்கு தென்புறத்தில் கிழமேலாக ஒரு மண் சாலை உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பிச்சை வீட்டிற்கு கீழ்புறம் மற்றும் எனது வீட்டிற்கு நடுவில் தென்வடலாக சந்து பாதை உள்ளது என்றால் சரிதான். வழக்கு பி பட்டியல் சொத்திற்கு மேல்புறத்தில் நாகம்மாள் வீடு உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. மீண்டும் வா.சா.ஆ.1 ஆவணத்தை காட்டி கேட்கும்போது பாதை நேராக நாகம்மாள் இடம் இல்லை. நாகம்மாள் இடத்தை தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக கையகப்படுத்திவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. தேசிய நெடுஞ்சாலையிலிருந்து நேரடியாக 1ம் பிரதிவாதி பிச்சை கடைக்கு சென்றுவிடலாம் என்றாலும் நடுவில் எந்த தடுப்பும் இல்லை என்றாலும்

எங்கள் பாதையை கடந்து தான் போகவேண்டும். மேற்படி பாதை இருப்பது குறித்து ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ 5 ஆவணத்தில் எனது ஏ அயிட்ட சொத்தான புல எண்.224/1 ஏ 3 க்கு செல்வதற்கு புல எண்.224/1 ஏ 2 வழியாக தான் பாதை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண்.224/1 ஜி1 க்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, சம்மந்தம் உண்டு. கந்தசாமி சொத்தும், எனது சொத்தும் ஒரே சொத்தாக இருந்தது என்றால் அந்த சொத்தானது அண்ணன், தம்பி சொத்தாகும். யார் அண்ணன் சொத்தை வாங்கியது யார் தம்பி சொத்தை வாங்கியது என்றால் நான் அண்ணன் சொத்தை வாங்கினேன். அவரது சகோதரி சொத்தை கந்தசாமி வாங்கினார். அண்ணன் தம்பி சொத்து என்பதால் அவர்கள் குடும்ப சொத்தில் தான் பாதை ஏற்படும் என்றாலும், அதனால் தான் வருவாய் ஆவணங்களில் கந்தசாமி சொத்து வழியாகவே பாதை ஏற்பட்டுள்ளது என்றாலும் அது தவறாக ஏற்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கிழமேலாக வந்து நாகம்மாள் மனைக்கு கீழ்புறம் உள்ள தென்வடல் சந்து வழியாக வந்து தான் எனது சொத்திற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். நானும், கந்தசாமியும் சொத்தை வாங்கிய பிறகு சரி சமமாக பிரித்து கொண்டு சந்து பாதையில் கடை கட்டி கொள்ள கந்தசாமிக்கு அனுமதி வழங்கிவிட்டு நான் 1 ம் பிரதிவாதி வீட்டிற்கு கீழ்புறத்தில் சந்தை பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. மேற்கண்ட காரணத்தினால் தான் 1 வது அயிட்ட சொத்துக்குரிய பாதையில் கந்தசாமி வீடு கட்டிவிட்டார் என்றால் சரியல்ல. அது தவறாக வருவாய் ஆவணத்தில் போடப்பட்டுள்ளது.

புல எண்.224/1ஜி2 ல் தான் பிரதிவாதி இடம் விட்டு கட்டியுள்ளார் என்றாலும், புல எண்.224/1ஜி1 ல் உள்ள இடம் கந்தசாமி இடத்துடன் முடிந்துவிட்டது என்றாலும் சரியல்ல, புல எண்.224/1ஜி2 ல் பிரதிவாதி இடம் விடவில்லை அவர் அத்தில் மட்டும் கட்டியுள்ளார். பிரதிவாதி அவ்வாறு இடம் விடவில்லை என்றால் நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலம் அளக்க நான் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. தேசிய நெடுஞ்சாலைக்கு இடம் இருக்கும் வரை தென்வடலாக மட்டுமே பாதை இருந்தது என்றால் சரிதான். சின்னசாமியிடமிருந்து சொத்தை எனது தகப்பனார் வாங்கினார் என்றால் சரிதான். மேற்கண்ட தென்வடல் பாதை தவிர கிழமேல் பாதை எதுவும் எனது பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் கிழமேல் ஜாதியடி 3 தென்வடல் ஜாதியடி 26 என்று தான் உள்ளது என்றால் சரிதான்.